## 12-ஆம் வகுப்பு – கணக்குப்பதிவியல்

## அரசு பொதுத் தேர்வு – 2023–24

## மெல்ல கற்கும் மாணவர்கள் குறைந்த பட்ச தேர்ச்சி பெற வழிகாட்டி

### பகுதி – அ (ஒரு மதிப்பெண் வினாக்கள்)

### சரியான விடையைத் தேர்ந்தெடு

**பாட புத்தகத்தில் (BOOK BACK) உள்ள**

**98 ஒரு மதிப்பெண் வினாக்கள் படித்தால்**

**குறைந்த பட்சம் 12 முதல் 15 மதிப்பெண்கள் உறுதி**

---

### பகுதி – ஆ (இரு மதிப்பெண் வினாக்கள்)

### மிகக் குறுகிய வினாக்கள்

1. **முழுமை பெறா பதிவேடுகள் என்றால் என்ன?**
   இரட்டைப் பதிவு முறையின் படி பராமரிக்கப்படாத பதிவேடுகள் அனைத்தும் முழுமை பெறா பதிவேடுகள் எனப்படும். இதில் ரொக்கம் மற்றும் ஆள்சார் கணக்குகள் மட்டுமே பதியப்படுகிறது.
2. **இரட்டைப் பதிவு முறை பின்பற்றாத போது சிறிய அளவிலான தனி வணிகர் பொதுவாக பராமரித்து வரும் கணக்குகளைத் தருக.**
   i) ரொக்கக் கணக்கு   ii) வாடிக்கையாளர் கணக்கு   iii) கடனீந்தோர் கணக்கு
3. **நிலை அறிக்கை என்றால் என்ன?**
   ஒரு குறிப்பிட்ட நாளுக்கான சொத்துகள் மற்றும் பொறுப்புகள் இருப்பை காட்டும் அறிக்கையே நிலை அறிக்கை ஆகும். வியாபாரத்தின் முதலினை அறிய இது தயாரிக்கப்படுகிறது.
4. **இலாப நோக்கற்ற அமைப்பின் பொருள் தரவும்.**
   இலாபம் ஈட்டும் நோக்கத்திற்காக அல்லாமல் பொதுமக்களுக்கு சேவை செய்யும் நோக்கத்திற்காக செயல்படும் அமைப்புகள் இலாப நோக்கற்ற அமைப்புகள் என்று அழைக்கப்படுகின்றன. **(எ.கா.)** கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள்
5. **பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு என்றால் என்ன?**
   பெறுதல் செலுத்துல்கள் கணக்கு என்பது ஒரு இலாப நோக்கற்ற அமைப்பில் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியில் தயாரிக்கப்படும் ரொக்கம் மற்றும் வங்கி நடவடிக்கைகளின் தொகுப்பு ஆகும்.
6. **உயில்கொடை என்றால் என்ன?**
   ஒரு இலாப நோக்கற்ற அமைப்புக்கு உயில் மூலமாக அளிக்கப்படும் பரிசு உயில்கொடை ஆகும். இது ஒரு முதலின வரவாகும்.
7. **ஆயுள் உறுப்பினர் கட்டணம் – சிறு குறிப்பு தரவும்.**
   உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் ஆயுள் உறுப்பினர் கட்டணம் ஒரு முதலின வரவாகும். இது திரும்பத் திரும்ப நிகழாத் தன்மை கொண்டது.
8. **இலாப நோக்கற்ற அமைப்பின் முதலின வரவுகளில் ஏதேனும் நான்கினைத் தரவும்.**
   i) ஆயுள் உறுப்பினர் கட்டணம்   ii) உயில்கொடை   iii) சிறப்பு நிதி   iv) பரிசு நிதி
9. **இலாப நோக்கற்ற அமைப்பின் வருவாயின வரவுகளில் ஏதேனும் நான்கினைத் தரவும்.**
   i) சந்தா   ii) பழைய செய்திதாள் விற்றது
   iii) முதலீடு மீதான வட்டி   iv) நிலைவைப்பு மீதான வட்டி

**10. கூட்டாண்மை வரைவிலக்கணம் தரவும்.**

"எல்லோரும் சேர்ந்தோ அல்லது எல்லோருக்குமாக ஒருவரோ நடத்தும் தொழிலின் இலாபத்தைப் பகிர்ந்து கொள்ள ஒப்புக் கொண்டவர்களிடையே நிலவும் உறவு" ஆகும்.

**– இந்திய கூட்டாண்மைச் சட்டம் 1932 பிரிவு (4)**

**11. கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?**

கூட்டாண்மை ஒப்பாவணம் என்பது கூட்டாளிகளுக்கிடையேயான உடன்படிக்கையின் விதிகளை உள்ளடக்கிய எழுத்து வடிவிலான ஒரு ஆவணம் ஆகும்.

**12. நிலைமுதல் முறை என்றால் என்ன?**

- ❖ நிலைமுதல் என்பது கூட்டாளிகளின் முதல் மாறாமல் இருக்கும்.
- ❖ இதில் இரண்டு கணக்குகள் பராமரிக்கப் பட வேண்டும். அவை
- ❖ i) முதல் கணக்கு ii) நடப்பு கணக்கு

**13. கூட்டாளி ஒருவருக்கு முதல் மீது வட்டி அனுமதிக்க மேற்கொள்ள வேண்டிய குறிப்பேட்டுப் பதிவு என்ன?**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | முதல் மீது வட்டி க/கு ப<br>கூட்டாளிகள் முதல் / நடப்பு க/கு<br>(முதல் மீது வட்டி வழங்கியது) | | x x x | <br>x x x |
| | இலாப நட்டப் பகிர்வு க/கு ப<br>முதல் மீது வட்டி க/கு<br>(முதல் மீது வட்டி கணக்கை முடிந்தது) | | x x x | <br>x x x |

**14. இலாப நட்டப் பகிர்வு கணக்கு ஏன் தயாரிக்கப்பட வேண்டும்?**

கூட்டாளிகளிடமிருந்து பெற வேண்டிய தொகை மற்றும் கூட்டாளிகளுக்கு செலுத்த வேண்டியது தொடர்பான நடவடிக்கைகளைச் சரிகட்டும் நோக்கத்திற்காக இது தயாரிக்கப்படுகிறது.

**15. நற்பெயர் என்றால் என்ன?**

ஒரு தொழிலுக்கு நன்மையை தரக்கூடிய அத்தொழிலின் புகழ் அல்லது நன்மதிப்பு நற்பெயர் ஆகும். நற்பெயர் ஒரு புலனாகா நிலைச் சொத்தாகும்.

**16. வாங்கப்பட்ட நற்பெயர் என்றால் என்ன?**

நற்பெயரானது, ரொக்கம் அல்லது பொருளைச் செலுத்தி பெறப்பட்டிருந்தால் அது வாங்கப்பட்ட அல்லது பெறப்பட்ட நற்பெயர் என்று அழைக்கப்படுகிறது.

**17. உயர் இலாபம் என்றால் என்ன?**

சாதாரண இலாபத்தை விடக் கூடுதலாக உள்ள சராசரி இலாபம் உயர் இலாபம் ஆகும்.

**உயர் இலாபம்** = சராசரி இலாபம் – சாதாரண இலாபம்

**18. சாதாரண இலாப விகிதம் என்றால் என்ன?**

ஒரே தன்மையுடைய வியாபார நிறுவனங்கள் சாதாரண சூழ்நிலைகளில் ஈட்டும் இலாப விகிதம் சாதாரண இலாப விகிதம் ஆகும்.

**19. கூட்டாண்மை நிறுவனத்தில் நற்பெயரை மதிப்பிடும் ஏதேனும் இரண்டு (நான்கு) சூழ்நிலைகளைத் தரவும்.**

i) புதிய கூட்டாளி சேர்க்கப்படும் போது ii) கூட்டாளி விலகும் போது

iii) நிறுவனத்தை கலைக்கும் போது

iv) இலாபப் பகிர்வு விகிதத்தில் மாற்றம் செய்யும் போது

**20. தியாக விகிதம் என்றால் என்ன?**

தியாக விகிதம் என்பது பழைய கூட்டாளிகள் தங்கள் இலாபத்தில் ஒரு விகிதத்ததை புதிய கூட்டாளிக்கு கொடுப்பதாகும்.

**தியாகப் பங்கு** = பழைய பங்கு – புதிய பங்கு

21. **கூட்டாளி விலகல் என்றால் என்ன?**

ஒரு கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து கூட்டாளி ஒருவர் வெளியே சென்றால் அது கூட்டாளி விலகல் எனப்படும்.

22. **ஆதாய விகிதம் என்றால் என்ன?**

ஆதாய விகிதம் என்பது தொடரும் கூட்டாளிகளுக்கு கிடைக்கப் பெற்ற இலாபத்தின் விகிதாச்சாரம் ஆகும். **ஆதாயப்பங்கு** = புதிய பங்கு – பழைய பங்கு

23. **பங்கு என்றால் என்ன?**

ஒரு நிறுமத்தின் முதல் குறிப்பிட்ட பண மதிப்பிலான பல சிறிய அலகுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும் இந்த அலகுகள் பங்குகள் என அழைக்கப்படுகின்றன.

24. **மிகை ஒப்பம் என்றால் என்ன?**

நிறுமம் வெளியிடப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையை விட விண்ணப்பிக்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் அது மிகை ஒப்பம் எனப்படும்.

25. **அழைப்பு நிலுவை என்பதன் பொருள் என்ன?**

பங்குதாரர் ஒருவர் தான் செலுத்த வேண்டிய அழைப்புத் தொகையை அழைக்கப்பட்டும் செலுத்தப்படாமல் உள்ள தொகை அழைப்பு நிலுவை எனப்படும்.

26. **பத்திர முனைமக் கணக்கு பற்றி சிறுகுறிப்பு வரையவும்.**

நிறுமம் தனது பங்குகளை முகமதிப்பை விட அதிகமான விலையில் வெளியீடு செய்தால் அது பங்குகளை முனைமத்தில் வெளியிடுதல் எனப்படும். மிகுதியான தொகை முனைமம் என்றழைக்கப்படும்.

27. **பங்குகள் ஏன் ஒறுப்பிழப்பு செய்யப்படுகின்றன?**

பங்குதாரர் ஒருவர் ஒதுக்கீட்டு பணத்தையோ அல்லது அழைப்புப் பணத்தையோ செலுத்தத் தவறினால் அவருடைய பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்படும்.

28. **தானியங்கும் கணக்கியல் முறை என்றால் என்ன?**

தானியங்கும் கணக்கியல் முறை என்பது கணக்கியல் மென்பொருள் உதவியுடன் கணக்கேடுகளை உடனடியாக பராமரிக்கும் அனுகுமுறையாகும்.

29. **கணக்கியல் அறிக்கைகள் என்றால் என்ன?**

கணக்கியல் அறிக்கையானது ஒரு நிறுவனத்தின் கணக்கேடுகளிலிருந்து பெறப்பட்ட கணக்கியல் தகவல் தொகுப்பாகும்.

30. **ஏதேனும் ஐந்து கணக்கியல் அறிக்கைகள் கூறு. (ஏதேனும் 5)**

| | | |
|---|---|---|
| i) நாளேடு / குறிப்பேடு | ii) பேரேடு | iii) இருப்பாய்வு |
| iv) இலாப அறிக்கை | v) இருப்புநிலைக்குறிப்பு | vi) ரொக்க ஓட்ட அறிக்கை |

31. **கணக்கியல் தகவல் அமைப்பு என்றால் என்ன?**

- ❖ கணக்கியல் தகவல் அமைப்பு நிதியில் தரவுகளை சேகரித்து அதை செயலாக பெறச் செய்து பல்வேறு பயனர்களுக்கு தகவலாக அளிக்கிறது.
- ❖ கணக்கியல் தகவல் அமைப்பு என்பது மேலாண்மையில் அனைத்து நிலைகளிலும் முடிவெடுப்பதற்கு தகவல்களை அளிக்கும் ஒரு முறையாகும்.

32. **Tally.ERP 9–ல் குழு என்றால் என்ன?**

- ❖ 2009 ஆம் ஆண்டு Tally Solutions, Tallly.ERP 9 எனும் மென்பொருளை அறிமுகம் செய்தது.
- ❖ Tally –யில் குழு என்பது ஒரே பண்புகளைக் கொண்ட பேரேடுகளின் தொகுப்பு ஆகும்.
- ❖ இந்த மென்பொருள் விரிவான வணிக மேலாண்மைக்கு தீர்வு அளிக்கிறது.

**மேலே உள்ள 32 இரு மதிப்பெண் வினாக்கள் படித்தால்**

**குறைந்த பட்சம் 6 முதல் 8 மதிப்பெண்கள் உறுதி**

---

## பகுதி – இ (மூன்று மதிப்பெண் வினாக்கள்)
## குறுகிய வினாக்கள்

1. **முழுமை பெறா பதிவேடுகளின் இயல்புகள் யாவை?**

***i) தன்மை:–*** இது நடவடிக்கைகளை அறிவியல் தன்மையற்ற மற்றும் ஒழுங்கற்ற முறையில் பதிவு செய்யும் ஒரு முறையாகும்.

***ii) பராமரிக்கப்படும் கணக்கின் வகைகள்:–*** ரொக்கம் மற்றும் ஆள்சார் கணக்குகள்

***iii) சீரற்றத் தன்மை:–*** நடவடிக்கைகளை பதிவு செய்வதில் சீரற்றத் தன்மை காணப்படுகிறது.

2. **முழுமை பெறா பதிவேடுகளின் குறைபாடுகள் யாவை?**

***i) பதிவேடுகள் முறையாகப் பராமரிக்கப்படாமை:–*** இது ஒரு அறிவியல் தன்மையற்ற மற்றும் ஒழுங்கற்ற கணக்கேடுகள் பராமரிப்பு முறையாகும்.

***ii) இருப்பாய்வு தயாரிப்பது கடினம்:–*** கணக்குகள், எல்லா விவரங்களுக்கும் பராமரிக்கப்படாததால் இருப்பாய்வு தயாரிப்பது கடினம்.

***iii) வியாபாரத்தின் உண்மையான இலாபம் ஈட்டும் திறனை கண்டறிவது கடினம்:–*** இலாபம், பெறப்படும் தகவல்கள் மற்றும் மதிப்பீடுகளிலிருந்து கணக்கிடப்படுவதால், வியாபாரத்தின் உண்மையான இலாபம் ஈட்டும் திறனை கண்டறிவது கடினம்.

3. **முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து கடன் விற்பனைத் தொகை எவ்வாறு கண்டறியப்படுகிறது?**

மொத்தக் கடனாளிகள் கணக்கை தயாரிப்பதன் மூலம் கடன் விற்பனையை கண்டறியலாம்.

**ப மொத்தக் கடனாளிகள் கணக்கு வ**

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ (தொடக்க இருப்பு) | XXX | ரொக்கக் க/கு (பெற்றது) | XXX |
| வங்கி க/கு (காசோலை மறுக்கப்பட்டது) | XXX | வங்கி க/கு (காசோலை பெற்றது) | XXX |
| | | அளித்த தள்ளுபடி க/கு | XXX |
| பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு க/கு (மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது) | XXX | விற்பனைத் திருப்பக் க/கு | XXX |
| | | வாராக்கடன் க/கு | XXX |
| **விற்பனை க/கு (கடன் விற்பனை)** | **XXX** | பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு க/கு (மாற்றுச்சீட்டு பெற்றது) | XXX |
| | | இருப்பு கீ/இ (இறுதி இருப்பு) | XXX |
| | **XXX** | | **XXX** |

4. **நிலை அறிக்கை வாயிலாக இலாபம் அல்லது நட்டம் கண்டறியும் படிநிலைகளைத் தரவும்.**

i) தொடக்க இருப்புகளை கொண்டு தொடக்க முதலைக் கண்டறியவும்.
ii) இறுதி இருப்புகளை கொண்டு இறுதி முதலைக் கண்டறியவும்.
iii) அடுத்ததாக இலாப நட்ட அறிக்கை தயாரிக்க வேண்டும்.

**.......ல் முடிவடையும் ஆண்டிற்கான இலாப நட்ட அறிக்கை**

| விவரம் | ₹ |
|---|---|
| இறுதி முதல் | XXX |
| **கூட்டுக:–** எடுப்புகள் | XXX |
| | XXX |
| **கழிக்க:–** கூடுதல் முதல் | XXX |
| சரிக்கட்டப்பட்ட இறுதி முதல் | XXX |
| **கழிக்க:–** தொடக்க முதல் | XXX |
| **இலாபம் அல்லது நட்டம்** | XXX |

5. **வருவாய் மற்றும் செலவினக் கணக்கு என்றால் என்ன?**
- ஒரு குறிப்பிட்ட ஆண்டிற்குரிய உபரி அல்லது பற்றாக்குறையை கண்டறிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு தயாரிக்கப்படுகிறது.
- இது ஒரு பெயரளவு கணக்காகும்.
- இது நிகழ்வு அடிப்படையிலான கணக்கியல் முறையாகும்.

6. **இலாப நோக்கற்ற அமைப்பின் இறுதிக் கணக்குகளில் ஆண்டுச் சந்தா எவ்வாறு கையாளப்படுகிறது?**

***i) வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் செயல்முறைகள்:–***
- நடப்பாண்டில் பெற வேண்டிய சந்தா கூட்டப் பட வேண்டும்.
- முன்கூட்டிப் பெற்ற நடப்பாண்டிற்குரிய சந்தா கூட்டப்பட வேண்டும்.
- முந்தைய, எதிர்வரும் ஆண்டுக்குரிய சந்தா நடப்பாண்டில் பெறப்பட்டிருந்தால் கழிக்கப்பட வேண்டும்.

***ii) இருப்புநிலைக்குறிப்பில் செயல்முறைகள்:–***
- நடப்பாண்டில் பெற வேண்டிய சந்தா இருப்புநிலைக்குறிப்பில் சொத்து பக்கத்தில் காண்பிக்கப்படும்.
- நடப்பாண்டில் முன்கூட்டிப் பெற்ற சந்தா இருப்புநிலைக்குறிப்பில் பொறுப்பு பக்கத்தில் காண்பிக்கப்படும்.

7. **இலாப நோக்கற்ற அமைப்பின் இறுதி கணக்குகளில் பின்வரும் விவரங்கள் எவ்வாறு கையாளப்படுகின்றன?**

**அ) விளையாட்டுப் பொருள்கள் விற்பனை ஆ) ஆயுள் உறுப்பினர் கட்டணம்**

**இ) தொடர் விளையாட்டுப் போட்டி நிதி**

***அ) விளையாட்டுப் பொருள்கள் விற்பனை:–*** இது வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் வருமானம் பக்கத்தில் காண்பிக்கப்படும். இது ஒரு வருவாயின வரவாகும்.

***ஆ) ஆயுள் உறுப்பினர் கட்டணம்:–*** இது இருப்புநிலைக் குறிப்பில் பொறுப்புகள் பக்கத்தில் காண்பிக்கப்படும். இது ஒரு முதலின வரவாகும்.

***இ) தொடர் விளையாட்டுப் போட்டி நிதி:–*** இது இருப்புநிலைக் குறிப்பில் பொறுப்புகள் பக்கத்தில் காண்பிக்கப்படும். இதை வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் பதிவு செய்யக்கூடாது.

8. **கூட்டாண்மையின் சிறப்பியல்புகளைத் தரவும்.**
- உறுப்பினர்கள் – குறைந்த பட்சம் – 2 அதிக பட்சம் – 50
- இலாபம் அல்லது நட்டத்தை பகிர்ந்து கொள்ள கூட்டாளிகளுக்கிடையே உடன்பாடு இருக்க வேண்டும்.
- கூட்டாண்மை நிறுவனத்தை கூட்டாளிகள் அனைவருமோ அல்லது ஒருவரோ நடத்தலாம்.
- உடன்பாடு எழுத்து வடிவிலோ (அ) பேச்சு வடிவிலோ இருக்கலாம்
- கூட்டாண்மை உடன்பாடு நிறுவனத்தை நடத்தி அதிலிருந்து கிடைக்கும் இலாபத்தை பகிர்வதாக இருக்க வேண்டும்.

9. **கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கங்கள் ஏதேனும் ஆறினைத் தரவும்.**

i) நிறுவனத்தின் பெயர் மற்றும் இடம் ii) தொழில் துவங்கிய நாள்
iii) கூட்டாளிகளின் பெயர் மற்றும் முகவரி iv) இலாப பகிர்வு விகிதம்
v) ஒவ்வொரு கூட்டாளியும் அளித்த முதல் vi) முதல் மீது வட்டி வீதம்
vii) எடுப்பு மீதான வட்டி வீதம் viii) கூட்டாளியின் ஊதியம்

10. **உயர் இலாப முறையில் நற்பெயர் எவ்வாறு கணக்கிடப்படுகிறது?**

ஒரு வியாபாரத்தின் உயர் இலாபம் என்பது சாதாரண இலாபத்தை விட கூடுதலாக உள்ள சராசரி இலாபம் ஆகும்.
- **உயர் இலாபம் =** சராசரி இலாபம் – சாதாரண இலாபம்

- ❖ சாதாரண இலாபம் = பயன்படுத்தப்பட்ட முதல் X சாதாரண இலாப விகிதம்
- ❖ பயன்படுத்தப்பட்ட முதல் = நிலைச் சொத்துகள் + நடப்பு சொத்துகள் – நடப்பு பொறுப்புகள்
- ❖ சாதாரண இலாப விகிதம் = ஒரே தன்மையுடைய வியாபார நிறுவனங்கள் சாதாரண சூழ்நிலைகளில் ஈட்டும் இலாப விகிதம்.

**11. மூலதனமாக்க முறையில் நற்பெயரின் மதிப்பு எவ்வாறு கணக்கிடப்படுகிறது?**

மூலதனமாக்க முறையில் நற்பெயர் என்பது பயன்படுத்தப்பட்ட முதலை விட கூடுதலாக உள்ள மூலதனமாக்கப்பட்ட சராசரி இலாபம் ஆகும்.

- ❖ நற்பெயர் = வியாபாரத்தின் மொத்த மூலதன மதிப்பு – பயன்படுத்தப்பட்ட முதல்
- ❖ வியாபாரத்தின் மொத்த மூலதன மதிப்பு = உயர்இலாபம்/(சாதாரண இலாப விகிதம்) X 100
- ❖ பயன்படுத்தப்பட்ட முதல் = நிலைச் சொத்துகள் (நற்பெயர் தவிர) + நடப்பு சொத்துகள் – நடப்பு பொறுப்புகள்

**12. அழைப்பு முன்பணம் குறித்து சுருக்கமாக எழுதவும்.**

- ❖ பங்கின் அழைக்கப்பட்ட மதிப்பை விட அதிகமாகப் பெறப்பட்ட தொகை அழைப்பு முன்பணம் எனப்படும். இது ஒரு நடப்பு பொறுப்பாகும்,
- ❖ இது பங்கு விண்ணப்பம் அல்லது பங்கு ஒதுக்கீடு அல்லது பங்கு அழைப்புக் கணக்கில் அதிகமாக பெறப்பட்ட தொகையாகும்.
- ❖ அவ்வாறு அதிகமாகப் பெறப்பட்ட தொகையை திருப்பி அளிக்க வேண்டும் அல்லது எதிர்காலத்தில் செலுத்த வேண்டிய தொகைகளில் சரிக்கட்ட வேண்டும்.

**13. ஒறுப்பிழப்பு செய்த பங்குகளின் மறுவெளியீடு என்றால் என்ன?**

- ❖ ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகள் நிறுமத்தால் மறுவெளியீடு செய்யப்படலாம். ஆனால், வெளியீட்டு விலை ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளின் செலுத்தப் பெறாத தொகையைக் காட்டிலும் குறைவாக இருக்கக் கூடாது.
- ❖ ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகள் நட்டத்தில் மறு வெளியீடு செய்யப்படும் போது, அந்த நட்டம் ஒறுப்பிழப்பு கணக்கில் பற்று செய்யப்படுகிறது.
- ❖ ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகள் முனைமத்தில் மறு வெளியீடு செய்யப்பட்டால், அந்த முனைமத்தொகை பத்திர முனைமக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

**14. சிறுகுறிப்பு வரைக. அ) அங்கீகரிக்கப்பட்ட முதல் ஆ) காப்புமுதல்**

***<u>அ) அங்கீகரிக்கப்பட்ட முதல்:–</u>***

- ❖ இது அமைப்பு முறையேட்டின் படி அங்கீகரிக்கப்பட்ட முதல் ஆகும்.
- ❖ இது அதிகபட்சமாக முதலாக திரட்ட அனுமதிக்கப்பட்ட தொகை

***<u>ஆ) காப்பு முதல்:–</u>***

- ❖ ஒரு நிறுமம் அதன் கலைப்பின் போது மட்டும் அழைப்பு விடுக்கலாம் என ஒதுக்கி வைத்துள்ள அழைக்கப்பட்ட முதலின் ஒரு பகுதியினை காப்பு முதல் என்று அழைக்கலாம்.

**15. ரொக்கம் தவிர இதர மறுபயனுக்கு பங்கு வெளியீடு என்றால் என்ன?**

நிறுமம், நிலம் மற்றும் கட்டடம், இயந்திரம் போன்ற நிலைச் சொத்துகளை வாங்கும் போது, பங்குகளை ரொக்கத்திற்கு அல்லாத மறு பயனுக்காக வெளியிடலாம்.

**16. கணக்கியல் சான்றாவணம் குறித்து சிறு குறிப்பு எழுதவும்.**

- ❖ நடவடிக்கைகளின் விவரங்களைக் கொண்டுள்ள ஒரு ஆவணமே கணக்கியல் சான்றாவணம் ஆகும்
- ❖ நடவடிக்கைகள் சான்றாவண பதிவுகள் மூலமே பதியப்பட வேண்டும்.
- ❖ ***<u>சான்றாவண வகைகளைப் பார்வையிட:–</u>***

  Gateway > Master > Accounts Info > Voucher Types > Display

17. **Tally.ERP 9–ல் முன்பே வரையறுக்கப்பட்ட பேரேடுகள் யாவை?**

ரொக்கம் மற்றும் இலாப நட்ட கணக்கு ஆகிய இரண்டு பேரேடுகளை TALLY கொண்டுள்ளது.

- ❖ மற்ற பேரேடுகளை அவற்றின் தேவைக்கேற்ப பயனர் உருவாக்கி கொள்ள வேண்டும்.
- ❖ ***பேரேடுகளை உருவாக்க:–***

Gateway of Tally > Masters > Accounts Info > Ledgers > Single Ledger > Create

18. **Tally.ERP 9–ல் இலாப நட்டக் கணக்கை எவ்வாறு பார்வையிடுவது என்பதை விளக்கவும்.**

***இலாப நட்ட கணக்கை பார்வையிட:–***

F 10 : A/c Reports > Profit & Loss A/c > Alt F 1 (Detailed) **(அல்லது)**

Gateway of Tally > Reports > Profit & Loss A/c > Alt F 1 (Detailed)

**மேலே உள்ள 18 மூன்று மதிப்பெண் வினாக்கள் படித்தால் குறைந்த பட்சம் 9 முதல் 12 மதிப்பெண்கள் உறுதி**

## பகுதி – ஈ (ஐந்து மதிப்பெண் வினாக்கள்)

## பெரு வினாக்கள்

1. **இரட்டைப்பதிவு முறை மற்றும் முழுமை பெறா பதிவேடுகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?**

| தலைப்பு | இரட்டைப்பதிவு முறை | முழுமை பெறா பதிவேடுகள் |
|---|---|---|
| i) நடவடிக்கைகளைப் பதிவு செய்தல் | பற்று மற்றும் வரவு ஆகிய இரு தன்மைகளும் பதிவு செய்யப்படுகின்றன. | பற்று மற்றும் வரவு ஆகிய இரு தன்மைகளும் பதிவு செய்யப்படுவதில்லை. |
| ii) பராமரிக்கப்படும் கணக்கின் வகைகள் | ஆள்சார், சொத்து மற்றும் பெயரளவுக் கணக்குகள் பராமரிக்கப்படுகின்றன. | ஆள்சார், மற்றும் ரொக்கக் கணக்குகள் மட்டுமே பராமரிக்கப்படுகின்றன. |
| iii) இருப்பாய்வு தயாரித்தல் | இருப்பாய்வு தயாரிக்க முடியும். | இருப்பாய்வு தயாரிப்பது கடினம். |
| iv) பொருந்தும் தன்மை | அனைத்து அமைப்புகளுக்கும் பொருந்தும் | சிறிய அளவிலான அமைப்புகளுக்கு மட்டும் பொருந்தும் |
| v) ஏற்புத்தன்மை | வருமான வரி அதிகாரிகள் ஏற்றுக் கொள்கின்றன. | வருமான வரி அதிகாரிகள் ஏற்றுக் கொள்வதில்லை. |

2. **நிலை அறிக்கை மற்றும் இருப்புநிலைக் குறிப்புக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைத் தரவும்.**

| தலைப்பு | நிலை அறிக்கை | இருப்புநிலைக் குறிப்பு |
|---|---|---|
| i) நோக்கம் | முதலை கண்டறிய தயாரிக்கப்படுகிறது. | நிதி நிலையைக் கண்டறிய தயாரிக்கப்படுகிறது. |
| ii) கணக்கியல் முறை | நிலை அறிக்கை தயாரிக்கப்படுகிறது | இருப்பு நிலைக் குறிப்பு தயாரிக்கப்படுகிறது. |
| iii) தயாரிப்பின் அடிப்படை | பேரேட்டுக் கணக்குகளை அடிப்படையாகக் கொண்டதல்ல. | பேரேட்டுக் கணக்குகளின் அடிப்படையிலேயே தயாரிக்கப்படுகிறது. |
| iv) நம்பகத் தன்மை | நம்பகத்தன்மை உடையது அல்ல. | நம்பகத்தன்மை உடையது. |

| | | |
|---|---|---|
| v) விடுபட்ட விவரங்கள் | விடுப்பட்ட விவரங்களை கண்டறிவது கடினம். | விடுப்பட்ட விவரங்களை எளிதில் கண்டறிய முடியும். |

**3. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிற்கும், வருவாய் மற்றும் செலவினக் கணக்கிற்கும் உள்ள வேறுபாடுகளைத் தரவும்.**

| அடிப்படை | பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு | வருவாய் மற்றும் செலவினக் கணக்கு |
|---|---|---|
| 1. நோக்கம் | ரொக்கப் பெறுதல்கள் மற்றும் ரொக்கச் செலுத்தல்களை அறிய தயாரிக்கப்படுகிறது | உபரி அல்லது பற்றாக்குறையை அறிய தயாரிக்கப்படுகிறது |
| 2. கணக்கின் தன்மை | சொத்துக் கணக்கு | பெயரளவு கணக்கு |
| 3. கணக்கியலின் அடிப்படை | ரொக்க அடிப்படையிலானது | நிகழ்வு அடிப்படையிலானது |
| 4. தொடக்க மற்றும் இறுதி இருப்பு | ரொக்கம் மற்றும் வங்கி கணக்கின் தொடக்க இருப்புடன் தொடங்கி, இறுதி இருப்புடன் முடிவடைகிறது. | தொடக்க இருப்பு என்பது கிடையாது. இது உபரி அல்லது பற்றாக்குறையுடன் முடிவடைகிறது. |
| 5. நடவடிக்கையின் தன்மைகள் | அனைத்து பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் | வருவாயின நடவடிக்கைகளை மட்டும் |

**4. நிலை முதல் முறைக்கும் மாறுபடும் முதல் முறைக்கும் இடையேயான வேறுபாடுகளைத் தரவும்.**

| அடிப்படை | நிலை முதல் முறை | மாறுபடும் முதல் முறை |
|---|---|---|
| கணக்குகளின் எண்ணிக்கை | இரண்டு கணக்குகள்<br>i) முதல் கணக்கு<br>ii) நடப்பு கணக்கு | ஒரு கணக்கு<br>i) முதல் கணக்கு |
| முதல் தொகையில் மாற்றம் | முதல் தொகை மாறாமல் இருக்கும் | முதல் தொகை பருவந்தோறும் மாறும் |
| இறுதி இருப்பு | முதல் கணக்கு வரவிருப்பு, நடப்பு கணக்கு பற்று அல்லது வரவு இருப்பு காட்டும் | முதல் கணக்கு வரவிருப்பையே காட்டும். இது பற்றிருப்பையும் கூடக் காட்டலாம். |
| சரிக்கட்டுதல்கள் | சரிக்கட்டுதல்கள் நடப்பு கணக்கில் செய்யப்படும். | சரிக்கட்டுதல்கள் முதல் கணக்கில் செய்யப்படும். |

**5. தியாக விகிதத்திற்கும் ஆதாய விகிதத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?**

| அடிப்படை | தியாக விகிதம் | ஆதாய விகிதம் |
|---|---|---|
| பொருள் | புதிய கூட்டாளிக்கு பழைய கூட்டாளிகள் தியாகம் செய்யும் பங்கு | தொடரும் கூட்டாளிகள் விலகும் கூட்டாளியிடமிருந்து பெறும் பங்கு |
| கணக்கிடும் முறை | தியாக விகிதம் = பழைய இலாப விகிதம் – புதிய இலாப விகிதம் | ஆதாய விகிதம் = புதிய இலாப விகிதம் – பழைய இலாப விகிதம். |
| நோக்கம் | தியாகம் செய்யும் கூட்டாளிகளுக்கு நற்பெயர் தொகையை கணக்கிட பயன்படுகிறது | ஆதாயம் பெறும் கூட்டாளிகளுக்கு நற்பெயர் தொகையை கணக்கிட பயன்படுகிறது |

| | | |
|---|---|---|
| கணக்கிடும் காலம் | புதிய கூட்டாளி சேர்ப்பின் போது கணக்கிடப்படுகிறது | கூட்டாளி ஒருவர் விலகும் போது கணக்கிடப்படுகிறது. |

6. **முன்னுரிமைப் பங்குகளுக்கும். நேர்மைப் பங்குகளுக்கு முள்ள வேறுபாடுகளை கூறவும்.**

| அடிப்படை | முன்னுரிமைப் பங்குகள் | நேர்மைப் பங்குகள் |
|---|---|---|
| 1. பொருள் | முன்னுரிமைப் பெற்றிருக்கும் பங்குகள் முன்னுரிமைப் பங்குகள் | முன்னுரிமைப் பங்குகள் அல்லாத பங்குகள் நேர்மைப் பங்குகள் |
| 2. பங்காதாயம் பெறும் உரிமை | பங்காதாயம் பெறுவதில் முன்னுரிமை | எவ்வித முன்னுரிமையும் இல்லை |
| 3. வாக்குரிமை | வாக்குரிமை கிடையாது | வாக்குரிமை உண்டு |
| 4. பங்காதாய விகிதம் | நிலையாக இருக்கும் | மாறிக் கொண்டே இருக்கும் |
| 5. பங்கின் பெயரளவு மதிப்பு | அதிகமாக இருக்கும் | குறைவாக இருக்கும் |

7. **கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாதபோது, இந்திய கூட்டாண்மைச் சட்டம் 1932–ன் படி கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து சிறு குறிப்பு தரவும்.**

***i) கூட்டாளிகளின் ஊதியம்:–*** எந்த கூட்டாளிக்கும் ஊதியம் அல்லது உழைப்பு ஊதியம் அனுமதிக்கப்பட வேண்டியதில்லை.

***ii) இலாப பகிர்வு விகிதம்:–*** இலாபங்கள் அல்லது நட்டங்களை கூட்டாளிகள் சமமாக பகிர்ந்து கொள்ள வேண்டும்.

***iii) முதல் மீது வட்டி:–*** கூட்டாளிகளின் முதல் மீது வட்டி அனுமதிக்கப்படுவதில்லை.

***iv) கூட்டாளிகளிடமிருந்து நிறுவனத்திற்காக பெறப்பட்ட கடன் மீதான வட்டி:–*** கடன் மீதான வட்டி ஆண்டுக்கு 6% வழங்கப்பட வேண்டும்

***v) எடுப்புகள் மீது வட்டி:–*** கூட்டாளிகளின் எடுப்புகள் மீது வட்டி விதிக்கக் கூடாது.

8. **நற்பெயரை தீர்மானிக்கும் ஏதேனும் ஆறு காரணிகளைத் தரவும்.**

***i) நிறுவனத்தின் இலாபம் ஈட்டும் திறன் :–*** நிறுவனத்தின் இலாபம் ஈட்டும் திறன் நற்பெயரின் மதிப்பினைத் தீர்மானிக்கிறது. அதிக இலாபம் ஈட்டும் நிறுவனம் அதிகமான நற்பெயர் மதிப்பினைக் கொண்டிருக்கும்.

***ii) நல்ல தரமான பொருள்கள் மற்றும் சேவைகள் வழங்குதல் :–*** நல்ல தரமான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதால் வாடிக்கையாளர்கள் மத்தியில் நன்மதிப்பை பெற்றிருக்கும்.

***iii) வியாபார நிறுவனத்தின் கால அளவு :–*** நீண்ட ஆண்டுகள் வணிகத்தை நடத்தி வரும் நிறுவனத்தை வாடிக்கையாளர் நன்கு அறிந்திருப்பதால் இந்த நிறுவனம் அதிக நன்மதிப்பைக் கொண்டிருக்கும்.

***iv) திறமைமிகு மேலாண்மை :–*** திறமையான மேலாண்மைத் திறன் கொண்டிருக்கும் நிறுவனம் அதிக மதிப்பிலான நற்பெயரைக் கொண்டிருக்கும்.

***v) போட்டியின் அளவு :–*** போட்டியே இல்லாத அல்லது குறைவான போட்டியைக் கொண்டுள்ள நிறுவனத்தின் நற்பெயர் மதிப்பு அதிகமானதாக இருக்கும்.

***vi) பிற காரணிகள் :–*** உரிமையாளரின் பிரபலம், ஈர்க்கக்கூடிய விளம்பரம், வாடிக்கையாளரிடம் நெருங்கிய தொடர்பு, போன்ற பிற காரணிகளும் நற்பெயரின் மதிப்பை உயர்த்தக் கூடியதாகும்.

9. **கூட்டாளி சேர்ப்பின் போது மேற்கொள்ள வேண்டிய சரிகட்டுதல்கள் யாவை?**

- ❖ பகிர்ந்து தரா இலாபம் , காப்பு மற்றும் நட்டம் ஆகியவற்றை பகிர்ந்து அளித்தல்
- ❖ சொத்துக்களையும், பொறுப்புகளையும் மறுமதிப்பீடு செய்தல்
- ❖ புதிய இலாப விகிதம் மற்றும் தியாக விகிதத்தை கணக்கிடுதல்

- ❖ நற்பெயர் சரிகட்டுதல்
- ❖ முதல் கணக்கை சரிகட்டுதல்.

**10. கூட்டாளி விலகலின்போது செய்யப்பட வேண்டிய சரிக்கட்டுதல்களை பட்டியலிடவும்.**

- ❖ பகிர்ந்து தரா இலாபங்கள் , காப்புகள் மற்றும் நட்டங்களை பகிர்ந்தளித்தல்
- ❖ சொத்துக்களையும், பொறுப்புகளையும் மறுமதிப்பீடு செய்தல்
- ❖ புதிய விகிதம் மற்றும் தியாக விகிதம் ஆகியவற்றை தீர்மானித்தல்
- ❖ நற்பெயர் சரிகட்டுதல்
- ❖ விலகும் கூட்டாளிக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்துதல்.

**11. Tally.ERP 9–ல் பொதுவாக பயன்படுத்தப்படும் சான்றாவணங்களின் வகைகளை குறிப்பிடவும்.**

***i) பெறுதல் சான்றாவணம்/வரவு குறிப்பு (Receipt Voucher):–***

அனைத்து ரொக்கம் அல்லது வங்கியின் மூலமான பெறுதல் நடவடிக்கைகள் பெறுதல் சான்றாவணத்தைப் பயன்படுத்தி பதியப்படுகிறது.

***பெறுதல் பதிவதற்கு:–***Gateway of Tally > Transactions > Accounting Vouchers > **F6** : Receipt

***ii) செலுத்தல் சான்றாவணம்/செலுத்தல் (Payment Voucher):–***

அனைத்து ரொக்கம் அல்லது வங்கியின் மூலமான செலுத்தல் நடவடிக்கைகள் செலுத்தல் சான்றாவணத்தைப் பயன்படுத்தி பதியப்படுகிறது.

***செலுத்தல் பதிவதற்கு:–***Gateway of Tally > Transactions > Accounting Vouchers > **F5** : Payment

***iii) எதிர்ப்பதிவு சான்றாவணம்/கான்ட்ரா (Contra Voucher):–***

ரொக்க கணக்கு மற்றும் வங்கி கணக்கு ஆகிய இரண்டும் உள்ளடங்கிய நடவடிக்கைகள் எதிர்ப்பதிவு சான்றாவணம் கொண்டு பதியப்படுகிறது.

***எதிர்ப்பதிவு பதிவதற்கு:–***Gateway of Tally > Transactions > Accounting Vouchers > **F4** : Contra

***iv) கொள்முதல் சான்றாவணம்/கொள்முதல் (Purchase Voucher):–***

கொள்முதல் சான்றாவணம் ரொக்க மற்றும் கடன் சரக்கு கொள்முதல் பதிவதற்கு பயன்படுத்தப்படுகிறது.

***கொள்முதல் பதிவதற்கு:–***Gateway of Tally > Transactions > Accounting Vouchers > **F9** : Purchase

***v) விற்பனை சான்றாவணம்/விற்பனை (Sales Voucher):–***

விற்பனை சான்றாவணம் ரொக்க மற்றும் கடன் சரக்கு விற்பனை பதிவதற்கு பயன்படுத்தப்படுகிறது.

***விற்பனை பதிவதற்கு:–***Gateway of Tally > Transactions > Accounting Vouchers > **F8** : Sales

***vi) உரிய குறிப்பேடு சான்றாவணம்/ஜர்னல் (Journal Voucher):–***

ரொக்கம், வங்கி, கொள்முதல் மற்றும் விற்பனை தவிர பிற நடவடிக்கைகளான தேய்மானம், வாராக்கடன் ஒதுக்கு போன்றவைகளை பதிவு செய்வதற்கு உரிய குறிப்பேடு சான்றாவணம் பயன்படுத்தப்படுகிறது.

***உரிய குறிப்பேடு பதிவதற்கு:–***Gateway of Tally > Transactions > Accounting Vouchers > **F7** : Journal

**12. கணினிமயக் கணக்கியல் முறையின் பயன்பாடுகளில் ஏதேனும் ஐந்தினை விளக்கவும்.**

***i) கணக்கேடுகளை பராமரித்தல்:–*** கணினி மைய கணக்கியல் முறையில் கணக்கேடுகளை எளிதாகவும் திறம்பட நீண்ட காலங்களுக்கு பராமரிக்கலாம்.

***ii) சரக்கிருப்பு மேலாண்மை:–*** கணினி மைய கணக்கியல் முறை திறம்பட சரக்கிருப்பு மேலாண்மைக்கு வழிவகை செய்கிறது.

***iii) அறிக்கை உருக்குதல்:–*** கணினி மைய கணக்கியல் முறை பல்வேறு வழக்கமான மற்றும் குறிப்பிட்ட நோக்க அறிக்கைகள் உருவாக்க உதவி புரிகிறது.

***iv) தரவு அனுப்புதல்:-***கணக்கியல் தரவு மற்றும் தகவல்களை நிறுவனத்தின் உள்ளேயோ அல்லது நிறுவனத்திற்கு வெளியேவோ உள்ள வேறு பயனரிடம் இருந்து அனுப்பலாம் அல்லது பெறலாம்.

***v) வரி விதிப்பு:-*** கணினி மைய கணக்கியல் முறை பல்வேறு வரிகளை கணக்கீடு செய்யவும் அதை பிடித்தம் செய்து அரசாங்க கணக்கில் செலுத்துவதற்கும் உதவி புரிகிறது.

***vi) சம்பளப் பட்டியல் தயாரித்தல்:-***கணினிமயக் கணக்கியல் முறை பணியாளரின் வருகையைப் பதிந்து, சம்பளத் தொகையைக் கணக்கிடுகிறது.

**மேலே உள்ள 12 ஐந்து மதிப்பெண் வினாக்கள் படித்தால்**

**குறைந்த பட்சம் 5 முதல் 10 மதிப்பெண்கள் உறுதி**

---

## கணக்குகள்

## அலகு – 1 – முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து கணக்குகள்

| | | |
|---|---|---|
| இலாப நட்ட அறிக்கை (அ) விடுப்பட்ட தகவல் | எ.கா. 1 முதல் 5 வரை<br>ப.க. 1 முதல் 5 வரை | 2 அல்லது 3 மதிப்பெண் வினா 1 இடம் பெற வாய்ப்பு |
| நிலையறிக்கையுடன் இலாப நட்ட அறிக்கை | எ.கா. 6 முதல் 9 வரை<br>ப.க. 6 முதல் 9 வரை | 5 மதிப்பெண் வினா 1 இடம் பெற வாய்ப்பு |
| மொத்த கடனாளிகள் கணக்கு, பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு, மொத்த கடனீந்தோர் கணக்கு, செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | எ.கா. 10 முதல் 16 வரை<br>ப.க. 10 முதல் 16 வரை | |

## அலகு – 2 – இலாப நோக்கற்ற அமைப்புகளின் கணக்குகள்

| | | |
|---|---|---|
| பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு | எ.கா. 1 முதல் 5 வரை<br>ப.க. 1 முதல் 5 வரை | 5 மதிப்பெண் வினா 1 இடம் பெற வாய்ப்பு |
| வருவாய் மற்றும் செலவின கணக்கு | எ.கா. 6 முதல் 7 வரை<br>ப.க. 6 முதல் 7 வரை | |

## அலகு – 4 – கூட்டாண்மை கணக்குகள் – நற்பெயர்

| | | |
|---|---|---|
| சாதாரண சராசரி இலாப முறை | எ.கா. 1 முதல் 3 வரை<br>ப.க. 1 முதல் 3 வரை | 2 அல்லது 3 மதிப்பெண் வினா 1 இடம் பெற வாய்ப்பு |
| சாதாரண சராசரி இலாப முறையில் சரிக்கட்டப்பட்ட இலாப முறை | எ.கா. 4 முதல் 5 வரை<br>ப.க. 4 முதல் 5 வரை | 5 மதிப்பெண் வினா 1 இடம் பெற வாய்ப்பு |
| கூட்டுச் சராசரி இலாப முறை | எ.கா. 6, ப.க. 6 | |
| உயர் இலாபத்தில் கொள்முதல் முறை | எ.கா. 7 முதல் 8 வரை<br>ப.க. 7 முதல் 8 வரை | |
| உயர் இலாபத்தில் ஆண்டுத்தொகை முறை | எ.கா. 9, ப.க. 9 | |
| உயர் இலாபத்தில் மூலதன்மாக்கல் முறை | எ.கா. 10, ப.க. 10 | |
| மூலதனமாக்கல் முறை | எ.கா. 11, ப.க. 11 | |

## அலகு – 8 – நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு

| | | |
|---|---|---|
| ஒப்பீட்டு அறிக்கை பகுப்பாய்வு | எ.கா.1 முதல் 3 வரை ப.க.1 முதல் 3 வரை | 2 அல்லது 3 மதிப்பெண் வினா 1 இடம் பெற வாய்ப்பு |
| பொது அளவு அறிக்கை | எ.கா.6 முதல் 9 வரை ப.க.6 முதல் 9 வரை | |
| போக்கு ஆய்வு | எ.கா.12 முதல் 13 வரை ப.க.12 முதல் 13 வரை | |
| ஒப்பீட்டு அறிக்கை பகுப்பாய்வு | எ.கா.4 முதல் 5 வரை ப.க.4 முதல் 5 வரை | 5 மதிப்பெண் வினா 1 இடம் பெற வாய்ப்பு |
| பொது அளவு அறிக்கை | எ.கா.10 முதல் 11 வரை ப.க.10 முதல் 11 வரை | |
| போக்கு ஆய்வு | எ.கா.14 முதல் 16 வரை ப.க.14 முதல் 16 வரை | |

## அலகு – 3 – கூட்டாண்மை நிறுவனக் கணக்குகள் – அடிப்படைகள்

| | | |
|---|---|---|
| கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாதபோது கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் கணக்கு | எ.கா. 1<br>ப.க. 1 | 5 மதிப்பெண் வினா 1 இடம் பெற வாய்ப்பு |

**மேலே உள்ள ஐந்து அலகுகில் உள்ள முக்கிய கணக்குகளை பயிற்சி செய்தால் குறைந்த பட்சம் 20 முதல் 25 மதிப்பெண்கள் உறுதி**

---

## மொத்தத்தில் சுமார் குறைந்த பட்சம்

## 45 முதல் 55 மதிப்பெண்கள் உறுதி

வாழ்த்துகளுடன்...

என்றும் அன்புடன்...

**மு.காதர்,** எம்.காம்., பி.எட்., எம்.பில்.,
முதுகலை வணிகவியல் ஆசிரியர்,
அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, புதுப்பாளையம்,
திருவண்ணாமலை மாவட்டம்.
செல்:– 94863 35786

---